

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | செப்டம்பர் 16, 2021 | புரட்சி 20 | முழக்கம் 29 | விலை: ரூ.3.00

# வலிமையான சட்டப் பாதுகாப்புகளுடன் நீட் விலக்கு சட்டசபையில் நிறைவேறியது

*சட்டசபையில் – செப்.13 அன்று நீட் விலக்கு மசோதாவைக் கொண்டு வந்து தமிழக முதல்வர் ஸ்டாலின் நிகழ்த்திய உரை.*

நீட் எனும் தேர்வை கொண்டு வந்து மருத்துவ கல்விக் கனவை சிதைத்து வரும் ஒன்றிய அரசுக்கு எதிராக கடந்த நான்கு ஆண்டுகளாக கடுமையான போராட்டத்தை தமிழ்நாடு நடத்தி வந்து கொண்டிருக்கிறது. விலைமதிக்க முடியாத மாணவ, மாணவியர் தனது இன்னுயிரை இழந்துள்ளார்கள். தொடக்கத்திலிருந்தே திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நீட் தேர்வை எதிர்த்து வந்திருக்கிறது. ஏனென்றால் மாணவர்களுக்கு கல்வித் தடையை ஏற்படுத்துக்கூடிய நுழைவுத்தேர்வுக்கு முற்றுப்புள்ளி வைத்த அரசுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு. இதன் தொடர்பாக கழக அரசு அமைந்தவுடன் முதல் சட்டமன்ற கூட்டத்தொடரிலேயே சட்டம் இயற்றப் படும் என்று திமுக தேர்தல் அறிக்கையில் குறிப்பிட் டிருந்தோம். அதை நிறைவேற்றும் வகையில் மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம். ஹோமியோபதி ஆகிய இளநிலை மருத்துவ சேர்க்கைகளை இனிமேல் 12ஆம் வகுப்பு தேர்வில் பெற்ற மதிப்பெண்களை அடிப்படை யாக வைத்து தேர்ந்தெடுப்பதற்கு ஏதுவாக வலிமையான சட்ட முன் முடிவை இந்த பேரவையில் நான் முன்மொழி கிறேன்.

கழக அரசு பொறுப்பேற்றவுடன் நீட் தேர்வுக்கு எதிரான சட்டப் போராட்டத்தை தொடங்கியிருக் கிறோம். ஒன்றிய அரசால் நடத்தப்படும் நீட் தேர்வால், சமுதாயத்தில் பின் தங்கியுள்ள மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பித்திட ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே.இராஜன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தோம். அரசு ஆணை எண் 283. மருத்துவ மக்கள் நல்வாழ்வுத் துறை.10.06.2021 அன்று இக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் பல்வேறு கல்வியாளர்கள், அதிகாரிகள் இடம் பெற்றிருந்தனர். இந்த உயர்மட்டக் குழுவின் ஆய்வு முடிவுகளும் வெளியிடப்பட்டது. பொது மக்களிட மிருந்து கருத்துக்களை இக்குழு பெற்றிருக்கிறது. மின்னஞ்சல், கடிதங்கள் மற்றும் ஆணையத்தில் வைக்கப்பட் டிருந்த கருத்துக் கேட்பு பட்டியலில் போடப்பட்ட மனுக்கள் என ஆணையத் திற்கு ஆயிரக்கணக் கானவர்கள் கருத்துக்களை தெரிவித் திருந்தனர். இந்த வழிமுறைகளின் வாயிலாக 86342 பேரிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து தனது விரிவான பரிந்துரைகளை நீதியரசர் ஏ.கே இராஜன் குழு 14.07.2021 அன்று அரசுக்கு அறிவித்தது. அந்தப் பரிந்துரைகளில் சமுதாயத்தில் பின்தங்கியோர் மருத்துவக் கல்வியை பெற இடையூறாகவும், சமூக பொருளாதாரத்தில் வள மிகுந்தவர்களுக்கு சாதக மாகவும் இருந்து எம்.பி.பிஎஸ் மற்றும் உயர் மருத்து வத்தில் உள்ள பலதரப்பட்ட பிரதிநிதித்துவத்தை நீட் தேர்வு பறித்துள்ளது என்று தெரிவித்திருக்கிறது.

**பொருளாதாரத் தடை**

குறிப்பாக, அரசுப் பள்ளியின் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் 2. 5 இலட்சமாக கொண்டுள்ளவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியிலனத்தோர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் பிரிவைச் சேர்ந்தோர் வசதி குறைந்தவர்கள் இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் எம்.பி.பி எஸ் மாணவர்களின் தகுதி தரத்தினை நீட் தேர்வு உறுதி செய்வதாக தெரியவில்லை. எனவும் ஒப்பிடுகையில் குறைந்த செயல்திறன் கொண்ட மாணவர்கள் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு மதிப்பெண்கள் மற்றும் மேல்நிலை மதிப்பெண்களில் எம்.பி.பி.எஸ் படிப்பில் சேர்க்கை பெறுவதற்கு மட்டுமே தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்வுகள் புகுத்தியுள்ளன என்பதை அறிக்கைகள் சுட்டிக் காட்டியுள்ளன.

**நிபுணர்கள் – அதிகாரிகள் ஆதரவு**

2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில்சார் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை சட்டத்தை, தமிழ்நாடு சட்டம் 3/2007 போன்றதொரு சட்டத்தை மாநில அரசு நிறைவேற்றி அதற்காக குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறலாம் என்று இந்தக் குழு பரிந்துரை செய்துள்ளது. இந்த உயர்மட்டக் குழு அளித்த விரிவான பரிந்துரைகளை செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையிலே அரசுச் செயலாளர்கள் குழு ஒன்று 15.07.2021 அன்று அமைக்கப்பட்டது. செயலாளர்கள் குழு 2007இல் தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டத்தைப் போன்று, மருத்துவக் கல்வியில் நீட் தேர்வை விலக்குவதற்கான காரணத்தை கூறி சட்டமியற்றி, சட்டமன்ற பேரவை யின் ஒப்புதலைப் பெற்று அதற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற வேண்டும் என்று கூறியுள்ளது.

**தரத்தை உயர்த்தவில்லை**

நீட் தேர்வானது மருத்துவக் கல்வியின் தரத்தை மேம்படுத்துகிறது என்பதும் தவறானது. 2017 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே அதிக மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் கல்லூரிகள் கொண்டிருக்கிற மாநிலமாக தமிழ்நாடும் இருந்தது. இந்த நிறுவனங்களிடமிருந்து பட்டம் பெற்றவர்கள் மற்றும் பல் மருத்துவர்கள் மிகவும் திறமை வாய்ந்தவர்களாக விளங்கினர். எனவே மேல்நிலை பள்ளி பாடதிட்டம் போதுமான தரத்தில் உள்ள சூழ்நிலையால் பள்ளி பாடத்திட்டத்தின் மதிப் பெண்ணால் கல்வியின் தரத்தை எந்த வகையிலும் குறைத்து விடாது. மேலும் பள்ளித்தேர்வு மதிப்பெண் நெறிப்படுத்துதல் மூலமாக சேர்க்கை நடைபெற்றால் அது முறையான நியாயமான சேர்க்கையாக விளங்கும். மருத்துவப்படிப்புக்கான சேர்க்கையினை இந்திய அரசியலமைப்புச் சட்டம் அட்டவணை பிரிவு 7,3 ஆவது பட்டியலில் 25ஆவது உள்ளீட்டில் காணலாம். எனவே மாநில அரசானது அதனை முறைப்படுத்த தகுதி உடையது. ஆகவே இன்று என்னால் இந்த சட்ட முன் முடிவு அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த புதிய சட்ட முன் முடிவில் மருத்துவ இளநிலை படிப்பில் அரசு ஒதுக்கீடு இடங்கள், தனியார் மருத்துவ கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு செய்யும் இடங்கள் ஆகியவற்றிற்கு 12 ஆம் வகுப்பு தேர்வு மதிப்பெண் மட்டுமே மாணவர் சேர்க்கை நடத்த முன்மொழியப்படுகிறது. மேலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 இட ஒதுக்கீடு முன்னுரிமை செய்யவும் முன்மொழியப் படுகிறது.



உயர்மட்டக் குழு வின் பரிசீலனையை உறுதி செய்த பின்பு சமூக நீதியை உறுதி செய்யவும், சமத்துவ மான சம வாய்ப்பு களை நிலைநிறுத்த வும் பாதிப்பிற் குள்ளாகக் கூடிய மாணவர்களை பாதுகாக்கவும், கிராமப்புறங்களில் வலுவான சுகாதார கட்டமைப்பை உறுதி செய்யவும் 12 ஆம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்களை கொண்டு அனைத்து மருத்துவ படிப்பு சேர்க்கைகளையும் மேற்கொள்ள சட்ட முன்முடிவு கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே அனைத்துக் கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் சட்ட முன் முடிவை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நீட் தேர்வால் அரியலூர் மாவட்டத்தைச் சார்ந்த அனிதா தொடங்கி ஏராளமான மாணவர்கள் உயிர்களை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். நேற்று கூட சேலம் மாவட்டத்தைச் சார்ந்த தனுஷ் நீட் தேர்வு பயத்தால் உயிரிழந் துள்ளார். உயிர்கொல்லியாக உள்ள நீட் தேர்விலிருந்து நிரந்தரமாக விலக்கு பெற இந்த மசோதாவை அனைத்து உறுப்பினர்களும் ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளின் சட்டப் போராட்டத்தின் விளைவாக மருத்துவக் கல்வியில் அகில இந்திய ஒதுக்கீட்டில் பிற்படுத் தப்பட்டோருக்கான 27% ஒதுக்கீட் டினை பெற்று வரலாற்று சாதனை படைத்துள் ளோம். இந்த நீட் தேர்வு விவகாரத்திலும் அனைத்து உறுப்பினர் களும் ஆதரவளித்து சமூகநீதி வரலாற்று சாதனை புரிந்திட துணை நிற்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் ஒருமித்து நிறைவேறியது.

## தீர்மானத்தின் சட்ட வலிமை

*தமிழக முதல்வர் ‘நீட்’ விலக்கு கோரி சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானம் சட்டத்தின் வலிமை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.*

*நீதியரசர் ராஜன் குழு மக்களிடம் இது குறித்து கருத்து கேட்டு, அதனடிப்படையில் ஒரு பரிந்துரை வழங்கியுள்ளது.*

*அதைத் தொடர்ந்து அரசுத் தலைமைச் செயலாளர் தலைமையில் அரசு அதிகாரிகள் பரிந்துரையை ஆய்வு செய்து ‘நீட்’ விலக்குக்கு சட்டமன்றத்தில் தீர்மானம் செய்யலாம் என்று அரசுக்கு பரிந்துரை செய்துள்ளனர்.*

*ஏற்கனவே முதலமைச்சர் ஜெயலலிதா, 2016இல் பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தில் நுழைவுத் தேர்வை தமிழ்நாட்டில் இரத்து செய்து சட்டமன்றத்தில் கலைஞர் ஆட்சியில் 2007 இல் சட்டசபையில் சட்டம் இயற்றி, அதிலும், குடியரசுத் தலைவர் ஒப்புதலைப் பெற்றிருந்ததை சுட்டிக் காட்டியிருக்கிறார். இத்தகைய வலிமையான சட்ட பின்புலத்துடன் நீட் விலக்கு சட்டம் இப்போது நிறைவேறியிருக்கிறது.*

## மொத்தமாய் கிடைத்த முகவரி



*அள்ளப் பழுத்த*
*அழகு முகத்தில்*
*வெள்ளைத் தாடி*
*விரிந்து கிடப்ப*
*கறுப்புடை போர்த்த*
*சிவப்பு ஞாயிறே!*

*செருப்பாய் கிடந்த*
*செந்தமிழ் இனத்துக்கு*
*அரியணை ஏறி*
*துரைத்தனம் நடத்தும்*
*உரிமை பெற்றுத் தந்தவனே!*

*தமிழ்நாட்டு இலையுதிர் காலத்து*
*எழுந்த வசந்தமே! தத்துவ மூலதனமே!*
*தமிழர்க்கு மொத்தமாய்*
*கிடைத்த முகவரியே!*

*நீ ஒருவன் மட்டும் உதித்திருக்காவிடில்*
*தர்ப்பைப் புல்லினால்*
*தமிழனின் கழுத்தைச்*
*சுருக்குப்போட்டு*
*தொங்க வைத்திருப்பர்!*

**– கவிஞர் புலமைப்பித்தன்**

தலையங்கம்

## மக்களைக் குழப்பும் ‘நவீனப் பார்ப்பனியம்’

உ.பி.யில், பா.ஜ.க., பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டைக் கூட்டியிருக்கிறது. பிற்படுத்தப்பட்டோர் உரிமைக் காவலராக தன்னை அடையாளப்படுத்த வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியிருக்கிறது. காரணம், அங்கே வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல் – உ.பி. மாநில தேர்தல். இந்திய அரசியலை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகிப்பதால், பிற்படுத்தப்பட் டோர் வாக்கு வங்கியை பா.ஜ.க. குறி வைக்கிறது. அதே பிற்படுத்தப்பட்ட மக்களின் கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார முன்னேற்றங்களைப் பற்றிக் கவலைப்படாமல் வாக்குகளை மட்டுமே குறி வைக்கிறார்கள்.

மற்றொரு பக்கம், பகுஜன் சமாஜ் கட்சியை நடத்தும் மாயாவதி, ‘பிராமணர்’ களைக் குறி வைத்து காய் நகர்த்துகிறார். ஆட்சிக்கு வந்தால் “பிராமணர்” கள் உயர்வுக்கும் பாதுகாப்புக்கும் அரணாக நிற்பேன் என்று உறதியளித்து வருகிறார். கடந்த செப்டம்பர் 7ஆம் தேதி, லக்னோவில் அவர் நடத்திய பகுஜன் சமாஜ் கட்சி மாநாட்டு மேடையில் இந்துக் கடவுள் ராமன், சிவன், விநாயகன் படங்கள் வைக்கப்பட்டு, அந்தக் கடவுள்களைப் போற்றி முழக்கங்களும் எழுப்பப்பட்டுள்ளன. வேத புரோகிதர்கள் ‘வேத சுலோகங்களை’, ‘உச்சாடனம்’ செய்து, மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கியுள்ளன. “இனி, பிற்படுத்தப் பட்ட. தலித் தலைவர்கள் சிலைகளை, பூங்காக்களை நான் நிறுவ மாட்டேன், மதத் தலைவர்கள், பிற்படுத்தப்பட்ட – தலித் அல்லாத தலைவர்களுக்கு பெருமை சேர்ப்பேன்” என்று மாநாட்டில் வெளிப்படையாகவே பேசியிருக்கிறார். “குறுகிய புத்தி கொண்ட, ஜாதிக்காரர்கள் தான் ‘பிராமணர்’ களை எதிர்க்கிறார்கள்; அவர்கள் மீது வன் முறையை ஏவுகிறார்கள்; அவர்களை சட்டத்தின் பிடியில் கொண்டு வந்து நிறுத்துவேன்” என்றும் மாயாவதி பார்ப்பனர்களை மகிழ்வித்திருக்கிறார். பா.ஜ.க., வாக்கு வங்கிக்காக பிற்படுத்தப்பட்டோர் உரிமை பேசுகிறது என்றால், மாயாவதி, “பிராமண” ஆதிக்கத்தை வாக்கு வங்கி அரசியலுக்காக நியாயப்படுத்துகிறார்.

“இராமன், கிருஷ்ணன் போன்ற இந்து கடவுள்களை வணங்க மாட்டேன்; புரோகிதர்களை வைத்து சடங்குகளை நடத்த மாட்டேன்” என்று புத்தம் தழுவியபோது அம்பேத்கர் எடுத்த உறுதிமொழிகளை காற்றில் பறக்கவிடவும் தயாராகி விட்டார்.

தமிழ்நாட்டில் இப்படி பா.ஜ.க.வினர்கூட – பகுஜன் சமாஜ் கட்சியினர் பேசுவதைப் போல் பேச முடியாது; மக்கள் அதை ஏற்க மாட்டார்கள். காரணம், தமிழ்நாட்டில் பெரியார் – அம்பேத்கர் கொள்கைகளை வெகுமக்கள் புரிந்து வைத்திருக் கிறார்கள் அந்த அளவு தமிழ்நாடு பக்குவப்படுத்தப்பட் டிருக்கிறது. அவ்வளவு எளிதாக ‘தலைகீழாக’ இங்கே புரட்டிப் போட்டுவிட முடியாது.

சமுதாயத்தை விழிக்கச் செய்து, அவர்களிடம் கொள்கை களை விதைப்பதில் தேர்தல் அரசியலில் ஈடுபடாத பெரியார் இயக்கங்களின் உழைப்பும் தொண்டும் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றன என்பதற்கு இவை சான்றுகள்.

தமிழ்நாட்டில் இப்படி நேரடியாக மக்களை மடைமாற்றிட முடியாது என்ற காரணத்தால் ‘ஆரிய இந்து வேறு; தமிழ் இந்து வேறு’ பெரியார் ஒட்டு மொத்த இந்துவையும் கடவுளையும் வறட்டுத்தனமாக எதிர்த்து, தமிழர் பண்பாட்டை சிதைத்து விட்டார் என்ற திசை திருப்பக்கூடிய சூழ்ச்சியான கருத்து களோடு சிலர் களமிறங்கியிருக்கிறார்கள். ‘திராவிட எதிர்ப்பு’ என்ற போர்வையோடு தமிழ்மொழிக் காவலர்களாக அடையாளப்படுத்தி நவீன பார்ப்பனியத்தின் தூதுவர்களாக மாறி நிற்கிறார்கள். தமிழ் பேசும் ‘பிராமணர்கள்’ தமிழர்களே; பிறமொழி பரம்பரையில் வந்தவர்கள், தமிழ்நாட்டில் வாழ்ந்தாலும் தமிழர்கள் அல்ல என்று ‘தமிழர்’ அடையாளத்துக்கு பார்ப்பனிய முலாம் பூசுகிறார்கள்!

‘திராவிட ஆட்சி’ தமிழகத்துக்கு எதிரி என்று இதுவரை பேசியும் எழுதியும் வந்தவர்கள், தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு நவீனத் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான கருத்தியல்களையும் செயல் திட்டங்களையும் தொடர்ந்து அறிவிக்கத் தொடங்கி யிருப்பதை இவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ‘இந்திய அரசு – மத்திய அரசு அல்ல; அது ஒன்றிய அரசு”. தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு தனி இடஒதுக்கீடு; கோயில் களில் தமிழ் வழிபாட்டு உரிமையைப் பரப்புவதற்கான திட்டம்; தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்தெடுக்கும் உலகப் பொருளாதார நிபுணர்களைக் கொண்ட ஆய்வுக் குழு; அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகராகும் உரிமை; பெண்களுக்கு வேலை வாய்ப்புகளில் 40 சதவீத ஒதுக்கீடு; ஒன்றிய ஆட்சியின் வேளாண் சட்டம், குடியுரிமைச் சட்டம், ‘நீட்’ சட்டங்களுக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம்; தேசியக் கல்விக் கொள்கைக்கு எதிர்ப்பு; தமிழ்நாட்டுக்கான புதிய கல்விக் கொள்கையை உருவாக்க, கல்வியாளர் குழு; ஆதி திராவிடர் பட்டியலினப் பிரிவினருக்கு தனி வாரியம் என்ற அடுக்கடுக்கான அறிவிப்புகள். தொழில் வளர்ச்சித் திட்டங்களால் மவுனமாகிப் போனவர்கள் இப்போது ‘திராவிடர் எதிர்ப்பு’ என்ற முனை மழுங்கிய கருத்தாக்கத்தை மீண்டும் எடுக்கத் தொடங்கி யிருக்கிறார்கள். ஒரு திராவிட இயக்கம், ‘பொருநை நதி’ நாகரிகத்தை அடையாளப்படுத்தும்போது, இந்திய துணைக் கண்ட வரலாறு – தமிழ்நாட்டிலிருந்து தான் எழுதப்பட வேண்டுமென்று திரவிட ஆட்சியின் முதல்வர் பேசும்போது திராவிடம் தமிழருக்கு எதிரானது என்ற தங்கள் வாதம் சுக்குநூறாக நொறுங்குவதை இவர்களால் சீரணிக்க முடியவில்லை.

எனவே தமிழ்நாட்டு மக்களைக் குழப்பும் ‘ஆரிய – இந்து; தமிழர் இந்து’ என்ற வாதங்களை இறக்குமதி செய்கிறார்கள். உ.பி.யில் பா.ஜ.க.வும் மாயாவதியும் அங்கே உள்ள மக்களைக் குழப்பி, வெற்றி பெற்று விடலாம்; ஆனால் தமிழ்நாட்டில் நவீனப் பார்ப்பனியத்தின் திசை திருப்பல்களால் ஒரு போதும் வெற்றி பெறப் போவது இல்லை.

# பார்ப்பன எதிர்ப்பு பேசிய தந்தையை சிறைக்கு அனுப்பிய முதலமைச்சர்

சட்டீஸ்கர் மாநில காங்கிரஸ் முதலமைச்சர் பூபேஷ் பாஹேல் சொந்த அப்பாவையே கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறார். அவருக்கு வயது 86. அவர் செய்த குற்றம் பார்ப்பனரை எதிர்த்து பேசினார் என்பது தான். தந்தையின் பெயர் 'நந்த குமார் பாஹேல்'. டெல்லியிலிருந்து விமானத்தில் கொண்டுவரப்பட்டு பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு தொடரப்பட்டு அவர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். இதில் குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய அம்சம் நான் பிணையில் வர மாட்டேன் என்னுடைய கருத்தை திரும்பப் பெற மாட்டேன் என்று 86 வயது தந்தை மகனை எதிர்த்து அறிவித்திருப்பது தான்.

ஜாதி தீண்டாமைக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்து வரும் நந்தகுமார் பாஹேல் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின மக்களின் உரிமைக்காக போராடி வருபவர். 1970இல் புத்த மார்க்கத்தை தழுவினார். தசரா பண்டிகையில் இராவணன் உருவம் எரிப்பதை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி அதற்காக இராவணன் பெருமையை பேசுகிற நூல் ஒன்றையே எழுதினார். நூலின் பெயர், ' பிரம்மன் குமார் இராவண் கோ மாட் மர்ரோ' இந்த நூல் அப்போதே கடுமையான எதிர்ப்புக்கு உள்ளாகி யது. பார்ப்பனர்களிடமிருந்து வந்த எதிர்ப்பின் காரணமாக அப்போது காங்கிரஸ் முதலமைச்ச ராக இருந்த 'அஜித் ஜோஹி' தலைமையிலான ஆட்சி இந்த நூலுக்கு தடை போட்டது. தடையை எதிர்த்து 17 ஆண்டுகாலம் சட்டப் போராட்டம் நடத்தினார். வெற்றிபெற முடிய வில்லை; ஆனாலும், பார்ப்பனர் களுக்கு எதிரான அவரது போராட்டக் குரல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருந்தது. காங்கிரஸ் கட்சி வேட் பாளர்களாக 80% பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின வேட்பாளர்களையே நிறுத்துங்கள் பார்ப்பனர், பனியா, தாக்கூர்களை விட்டு காங்கிரஸ் கட்சி விலக வேண்டும் என்று 2018ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியின் தலைமைக்கு அவர் கடிதம் ஒன்றை எழுதினார். கட்சிக்குள் அது பெரும் சலசலப்பை உருவாக்கியது. அப்போது காங்கிரஸ் கட்சியின் மிகப் பெரிய பொறுப்பில் இருந்த மகன் பூபேஷ் பாஹேல் அது அவருடைய கருத்து என்னுடைய கருத்து அல்ல என்று மறுக்க வேண்டி இருந்தது.

நந்தகுமார் பாஹேல், மனைவி இறந்த போது இந்து மத சடங்குகளை அவர் செய்ய மறுத்தார். பவுத்த முறைப்படிதான் இறுதிச்சடங்குகள் நடக்க வேண்டும் என்று அவர் கூறினார். மனைவி இறந்த நேரத்தில் கொள்கைக்காக மகனுடன் போராடினார். ஆனால் மகன் இந்து முறைப் படியே சடங்கு நடத்தினார். அதை தந்தை நந்தகுமார் பாஹேல் ஏற்க மறுத்துவிட்டார். கொள்கையில் நான் சமரசம் செய்ய மாட்டேன் என்று மகனுடன் தொடர்ந்து போராடி வரும் அவர் இப்போது மகன் முதலமைச்சராக இருந்தும் பிணை கேட்க மாட்டேன் என்று சிறைக்கே சென்று விட்டார். தந்தையை கைது செய்த பூபேஷ் வாஹேல் இப்போது மாநிலத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களிடம் பெரும் செல்வாக்குள்ள முதல்வராக வலம் வருகிறார். தன்னை அரசியலில் ஒடுக்கப்பட்ட மக்களிடம் நிலைநிறுத்திக் கொண்டுவிட்டார் என்று இன்றைய இந்து ஆங்கில நாளேடு (10.09.2021) விரிவான செய்திக் கட்டுரை ஒன்றை வெளியிட்டு இருக்கிறது.

இவரை முதலமைச்சர் பதவியிலிருந்து அகற்றிவிட்டு அவரது அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள 'டி.எஸ் சிங் தியோ' என்பவரை முதல்வராக்க ஏற்கெனவே இராகுல் காந்தியும், பிரியங்கா காந்தியும் முடிவெடுத்து இருந்தனர். ஆனால் பூபேஷ் பாஹேல் ஆட்சியில் கொண்டு வந்த பிற்படுத்தப்பட்டோர் திட்டங்கள், சட்டங் களால் அவர் செல்வாக்கு மிகவும் பெருகி அகற்ற முடியாத நிலையில், அவரை பதவியிலிருந்து நீக்கிவிட்டு வேறொருவரை அமர்த்தும் முடிவை செயல்படுத்த முடியாத நிலைக்கு பிரியங்காவும், இராகுலும் தள்ளப்பட்டிருக்கின்றனர் என்று அந்த செய்தி கூறுகிறது.

கடந்த ஆகஸ்டு 30 ஆம் தேதியில் நந்தகுமார் வாஹேல் உ.பி யில், முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் ஆட்சியில் ஆசிரியர் நியமனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை நிராகரித்ததை எதிர்த்து நடைபெற்ற போராட் டத்தில் பங்கேற்றார். அடுத்த நாள் இந்தி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் “பிராமணர்களை புறக்கணியுங்கள்; அவர்களை மீண்டும் வால்கா நதிப் பகுதிக்கே திருப்பி அனுப்ப வேண்டும். உங்கள் கிராமங்களில் அவர்களை நுழைய விடாதீர்கள்” என்று அவர் வெளிப்படையாக அளித்த பேட்டி தான் இப் போது அவரை சிறைக்கு அனுப்பி வைத்திருக் கிறது.

இப்போதும், வேதங்களும், மனுசாஸ் திரங்களும், இந்து புராணங்களும், சூத்திர இழிவையும், தீண்டாமையையும் புனிதப் படுத்துகிற புனித நூலாக கருதுகிற நிலையில், எதிர்ப்புக் குரல் கொடுத்தவர்கள் மட்டும் மகன் முதலமைச்சராகவே இருந்தாலும் கூட சிறைக்கு செல்ல வேண்டி இருக்கிறது. பார்ப்பன ஆதிக்கம் அந்த அளவிற்கு கொடி கட்டிப் பறக்கிறது.

# தாலிபான்கள் நடத்தியது தேசிய விடுதலை போராட்டமா?

மக்களின் சுயமரியாதை, அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, அவர்களுக்கு இடையிலான சமத்துவம் இந்த அடிப்படையான பார்வையோடு, மொழி, இனம், தேசியம், தேசபக்தி என்ற கோட்பாடுகளை அனுக வேண்டும். இதற்கு மாறான பார்வை பாசிச ஆபத்திற்கு அழைத்துச் சென்றுவிடும். பார்ப்பனியம் தன்னை பாசிசமாக உருவாக்கம் செய்து கொண்டதை எதிர்த்துத்தான் பெரியார் பார்ப்பன எதிர்ப்பைப் பேசினார்.

ஆப்கானில் தற்போது தாலிபான்கள் அதிகாரத்தை கைப்பற்றி இருக்கிறார்கள். சொந்த மண்ணிலிருந்து இரஷ்யாவையும், அமெரிக்காவையும் அவர்கள் வெளியேற்றி இருக்கிறார்கள். எனவே அவர்கள் நடத்தியது தேசியத்திற்கான விடுதலைப் போராட்டம் என்ற பார்வையோடு சில தமிழ் தேசியர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். சில இடதுசாரி பிரிவினர் அமெரிக்காவை ஆப்கான்கள் எதிர்ப்பதை ஏகாதிபத்திய எதிர்ப்பாக போற்றுகிறார்கள். இந்த பார்வை சரியானது அல்ல என்பதே நமது கருத்து.

தாலிபான் இப்போது அனைவரையும் உள்ளடக்கிய அமைச்சரவையை அமைக்காமல் ‘இஸ்லாமிய ஆப்கான் அமீரக ஆட்சி’ என்று தனது ஆட்சியை அறிவித்திருக்கிறது. 'ஷரியத்' சட்டப்படி ஆட்சி நடத்தப்போவதாகவும் பிரகடனப்படுத்தியிருக்கிறது. பெண்கள் 'ஹஷாரா ஷியா' பிரிவு, அமைச்சரவையில் முற்றாக புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. 33 அமைச்சர்களில் 30 அமைச்சர்கள், இஸ்லாமியர்களிலேயே ‘பட்டானி (பஷ்டான்)’ என்ற பிரிவைச் சார்ந்தவர்கள். டாஜிக்ஸ் இனக் குழுவைச் சார்ந்த இருவரும், ‘உஷ்பக்’ இனக்குழுவைச் சார்ந்த ஒருவரும் அமைச்சரவையில் இடம் பெற்று இருக்கிறார்கள். அமைச்சரவையில் இடம் பெற்ற 17 பேர் அய்.நா.வால் தேடப்படும் பயங்கரவாதிகள் பட்டியலில் இடம் பெற்றவர்கள். ஆட்சியின் தலைவரும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.

1990 களில் ஆட்சியை கைப்பற்றிய போது இருந்த நிலைமை இப்போது முற்றாக மாறுபட்டுள்ளது. அப்போது அஞ்சியிருந்த பெண்கள், இப்போது உரிமை கோரி போராட தொடங்கிவிட்டார்கள். அவர்களை துப்பாக்கி முனையில் ஆட்சி ஒடுக்குகிறது. ‘பஞ்சிஷீர்’ மாகாணத்தில் வாழும் இனக் குழுவினர் தாலிபான்களை எதிர்த்து ஆயுதப் போராட்டத்தை நடத்துகிறார்கள். அந்த மாகாணத்தை தாலிபான்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்ததற்குப் பிறகு அவர்கள் மலைகளில் போய் பதுங்கி மீண்டும் தொடர்ச்சியாக ஆயுதப் போராட்டத்தை நடத்தும் சூழ்நிலை உருவாகிவிட்டது.

பாகிஸ்தான், சீனா, இரஷ்யா, ஆதரவும் இப்போது தாலிபான்களுக்கு கிடைத்திருக்கிறது. இந்தப் பிண்ணனியில் அனைவரையும், அனைத்து இனங்களையும் உள்ளடக்காத ஒரு ஆட்சியை தேசிய விடுதலைக்கான ஆட்சியாக பார்ப்பது என்பது பாசிச ஆதரவுப் பார்வையாகவே இருக்க முடியும்.

## பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பா.ஜ.க. ஆட்சி வரை (8)

# அரசின் கங்காணிகளே ஆளுநர்கள்

*ஆளுநரை ஒன்றிய ஆட்சியின் அதிகார தரகராக்கி தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை தங்களது ஆட்சிகளாக்கும் முறைகேடு பா.ஜ.க.வில் சர்வ சாதாரணமாகிவிட்டது. காங்கிரஸ் ஆட்சியிலும் இந்தப் போக்கு இருந்தது. ஆளுநர் குறித்து அரசியல் நிர்ணய சபையில் கடும் விவாதங்கள் நடந்தன.*

**விடுதலை இராசேந்திரன்**

பன்வாரிலால் புரோகித் மாற்றப்பட்டு உளவு நிறுவனத்தில் பணியாற்றிய அய்.பி.எல். அதிகாரி ரவி, புதிய ஆளுநராகப் பதவி ஏற்க இருக்கிறார். ஆளுநர் பதவி குறித்து அரசியல் நிர்ணய சபையில் நடந்த விவாதங்களை சுருக்கமாகப் பார்க்கலாம். முரசொலி மாறன் எழுதிய 'மாநில சுயாட்சி' நூலிலிருந்து சில பகுதிகள்:

கவர்னரைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். குடியரசுத் தலைவர் நியமிக்கிறார் என்றால் பிரதமர் நியமிக்கிறார் என்று பொருள்.

பிரதமர் நியமிக்கிறார் என்றால் மத்திய அரசை ஆளுகின்ற கட்சி அப்படி முடிவு எடுக்கிறது என்று பொருள்.

அரசியல் நிர்ணய சபை எடுத்த எடுப்பிலேயே இந்த முடிவுக்கு வந்து விடவில்லை. பலவித முடிவுகளை அலசி ஆராய்ந்து, இறுதியில் இப்படி நியமனம் செய்யும் முடிவுக்கு வந்தது.

அவற்றையெல்லாம் ஆராய்ந்தால், கவர்னர் பதவியை நியமனப் பதவி யாக்கியதன் உள்நோக்கம் நன்கு புலப்படும்.

அரசியல் நிர்ணய சபையின் துவக்கக் காலத்தில், வயது வந்தோருக்கு வாக்குரிமை என்கிற அடிப்படையில் மாநிலத்து வாக்காளர்கள் அனைவரும் பெரும்பான்மை வாக்குகளால் அந்த மாநிலத்து கவர்னரைத் தேர்ந் தெடுக்கலாம் என்று முடிவு செய்தார்கள்.

அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட கவர்னரிடம் 1935ஆம் ஆண்டுச் சட்டத்தில் உள்ளதுபோல, உசிதம் போல் அமைச்சரவையின் ஆலோசனைகளைக் கேட்காமல் செயலாற்றுகிற அதிகாரங்களையும் (Discretionary powers), சட்டசபையைக் கலக்காமல் பயன்படுத்தக்கூடிய சிறப்பு அதிகாரங்களையும் (Special powers) ஒப்படைக்கலாம் என்றும் அப்போது கருதப்பட்டது.

- ஆனால், இந்தக் கருத்தினைப் பின் ஏன் மாற்றிக் கொண்டார்கள்?

ஜவகர்லால் நேரு 1949, மே 31ஆம் நாளன்று அரசியல் நிர்ணய சபையில் பேசும்போது, இதற்கான காரணங் களை விளக்கியிருக்கிறார்.

ஆனால், உண்மை இதுதான்; ஒரு மாநிலத்து கவர்னரை அந்த மாநிலத்து மக்களே தேர்ந்தெடுப்பதாக இருந்தால், அந்த மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் தாம் கவர்னர் ஆக முடியும். எனவே, மாநிலத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் கவர்னர் வலிமை மிகுந்த ஜாம்பவனாக - மத்திய அரசுக்குக் கட்டுப் படாமல், மத்திய அரசையே கேள்வி கேட்க முனைந்தால் என்ன செய்வது என்கிற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டது. எனவேதான், மத்திய அரசின் பிடியைப் பலப்படுத்திக் கொள்ள கவர்னரைத் தேர்ந்தெடுக்க வேண்டாம் என்று முடிவு செய்தார்கள்.

ஆனால், நேரு நேரடியாக இந்தக் காரணத்தை வெளிப்படையாகக் கூறவில்லை. 'மாகாணப் பிரிவினை உணர்ச்சிகளும், குறுகிய, மாகாண ரீதியான எண்ணங்களும், செயலும் ஊக்கப்படுத்தப் படும்' என்று பண்டித நேரு சுற்றி வளைத்துக் கூறினார்.

டாக்டர் பி.எஸ்.தேஷ்முக் இன்னொரு சூழ் நிலையைப் பயங்கரமாகப் படம் பிடித்துக் காட்டினார்: "மாநிலத்தில் உள்ள மிக முக்கிய மனிதர்களான கவர்னரும், முதலமைச்சரும் எல்லாவற்றிலும் ஒத்துப் போவதாக இருந்து, மத்திய அரசை எதிர்ப்பதிலும் அவர்கள் ஒத்துப் போய் விட்டால் என்ன செய்வது? மத்திய அரசு சொல்கிற கருத்துரை களையும், பிறப்பிக்கிற கட்டளைகளையும் அந்த மாநில அரசு கேட்கா விட்டால், மத்திய அரசு அந்த மாநிலத்தின் மீது படை யெடுத்துச் செல்லுமா?" - என்று அவர் கேட்டார்.

கவர்னர் பதவிக்குத் தேர்தல் நடத்தினால், அதன் காரணமாகப் பணச் செலவு ஏற்படும் என்பதும் ஒரு காரணமாகக் காட்டப்பட்டது.

இந்த முறை அமுலுக்கு வந்தால் கவர்னர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். முதலமைச்சரோ முதலில் ஒரு தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இறுதியாக கவர்னரால் முதலமைச்சராக நியமிக்கப்படுகிறவர். ஆனால், கவர்னருக்கோ 'நான்தான் நேரடியாக மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன்' என்கிற உணர்ச்சி இயற்கை யாகவே ஏற்படும். இப்படி இரு பதவிகளில் இருப்பவர்களும் தேர்ந்தெடுக்கப்படு கிறவர்களாக ஆகி விட்டால் அதிகாரத்தைப் பயன்படுத்தும் விஷயங்களில் இருவருக்கும் மோதல் ஏற்படும் என்கிற காரணமும் மறுபரிசீலனைக்கான காரணங்களில் ஒன்றாகும்.

தேர்தல் நடத்தித் தேர்ந்தெடுத்தால் கவர்னருக்கும், முதலமைச்சருக்கும் மோதல் ஏற்படும் என்கிற வாதத்தை டாக்டர் அம்பேத்கர் ஏற்றுக் கொள்ள வில்லை. கவர்னர் தேர்தல் தனி மனிதரின் செல்வாக்கின் அடிப்படையில் - இவர் இந்தப் பதவிக்கு ஏற்றவரா? அதற்கேற்ற கல்வியறிவும், குணமும் இவரிடம் இருக்கின்றனவா? என்கிற பரிசீலனைக்கு உட்பட்டு நடக்கும். ஆனால், முதலமைச்சர் தேர்தலோ, இவருடைய திட்டம் ஒத்து வருமா? சரியானதா? என்கிற அடிப் படையில் அமையும். எனவே, தேர்ந்தெடுக்கப்படுவதன் காரணமாக இருவருக்கும் மோதல் ஏற்படக்கூடும் என்பதை அவர் ஒப்புக் கொள்ளவில்லை.

ஆனால், 1935ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி (பிரிட்டிஷ் ஆட்சியில் மாகாணங்களுக்கு வழங்கப் பட்ட சட்டம்-ஆர்) கவர்னருக்குத் தரப்பட்ட சிறப்பு அதிகாரங்கள் அனைத்தையும் தம் உசிதம்போல் பணியாற்றும் அதிகாரங்களில் பலவற்றையும் நீக்கி விட்டு, அமைச்சரவையின் பரிந்துரையின்படியே கவர்னர் பெரும்பாலும் பணியாற்ற வேண்டும் - என்று அமைத்துவிட்டதால், அத்தகைய பதவிக்கு ஏராளமான பணம், நேரம், உழைப்பு ஆகியவற்றைச் செலவிடும் தேர்தல் வேண்டுமா என்கிற கேள்வி பிறந்ததாகவும், முன்புபோல் அப்பதவிக்கு அதிக அதிகாரங்கள் இல்லை என்பதை உணர்ந்தவர்கள் எவரும் கவர்னர் தேர்தலில் கலந்து கொள்ள மாட் டார்கள் என்றும்; அதனால்தான் தேர்ந்தெடுக்கிற முடிவைக் கைவிட்டதாகவும் டாக்டர் அம்பேத்கர் கூறினார்.

> - *அரசமைப்பு நிர்ணய சபையில் ஆளுநர் குறித்து நடந்த விவாதம் என்ன?*
> - *மாநிலங்களைக் கண்காணிக்கவே ஆளுநர் என்று ஒப்புதல்.*
> - *ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள 'சுயவிருப்பு' அதிகாரங்கள் முறைகேடாகப் பயன்படுத்தி ராஜாஜி தமிழக முதல்வரானார்.*

அரசியல் சட்டத்தை எழுதிய 'நகல் வரைவுக் கமிட்டி' (Drafting Committee) மேலும் இரு யோசனைகளை முன் வைத்தது.

முதல் யோசனை: முதலமைச்சர் போல கவர்னரை அந்தந்த மாநிலத்துச் சட்டமன்ற உறுப்பினர்களே தேர்ந்தெடுப்பது. - இது இரண்டு முதலமைச்சர்களை உருவாக்குவதற்குச் சமம் என்று கருதி இந்த யோசனை கைவிடப்பட்டது.

இரண்டாவது யோசனை : கவர்னர் பதவிக்கான வேட்பாளர்களைப் பட்டியலாகத் தயாரித்து, இந்தப் பட்டியலில் காணும் ஒருவரைக் குடியரசுத் தலைவர் கவர்னராக நியமிக்கலாம் என்று சட்டமன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றிக் குடியரசுத் தலைவருக்கு அனுப்புவது; பிறகு குடியரசுத் தலைவர் அந்தப் பட்டியலி லிருந்து ஒருவரை கவர்னராக நியமிப்பார்.

இந்த முறை அமுல்படுத்தப்பட்டால் மாநிலத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய அல்லது பெரும் பான்மை பெற்றிருக்கக்கூடிய கட்சியின் ஆதரவைப் பெற்றவர்கள் தாம் கவர்னராக வரமுடியும்.

பிறகு கவர்னருக்கும், மாநிலச் சட்டமன்றத்திற்கும் தொடர்பு ஏற்பட்டுவிடும்; அதன் பின்னர் மத்திய அரசு விரும்புவதுபோல் காரியங்கள் நடக்காமல் போய்விடக்கூடும் - என்கிற உள்நோக்கத்தாலேயே இந்த யோசனையும் கைவிடப்பட்டது.

இறுதியாகத்தான், கவர்னர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவார் என்கிற திருத்தத்தைப் பிரஜேஸ்வர் பிரசாத் என்பவர் கொண்டு வந்தார்.

"மத்திய அரசின் அதிகாரம் எல்லா மாகாணங் களிலும் நிலை நாட்டப்பட வேண்டியது அவசியம்" - என்பதையே அந்தத் திருத்தத்திற்குக் காரணமாகக் காட்டினார்.

"இந்த நாட்டின் நடுத்தர வர்க்கத்து அறிவாளி களிடையே படைக்கும் சக்தி இல்லாமல் போய் விட்டது. தாமாகவே முயற்சி மேற் கொள்ளும் போக்கு அவர்களை விட்டு நீங்கி விட்டது. இந்த மண்ணை ஆளவேண்டிய மக்கள் எல்லா வழிகளிலும் ஒடுக்கப்பட்டவர்களாகவும், சுரண்டப்பட்டவர் களாகவும் இருக்கிறார்கள். இந்த மாதிரியான சூழ்நிலையில் மாகாண நிர்வாகத்தைத் தன் கையில் வைத்திருப்பதைத் தவிர இந்தியப் பேரரசுக்கு வேறு வழி இல்லை" - என்று பிரஜேஷ்வர் பிரசாத் கூறினார்.

சர்வ வல்லமை பெற்ற ஞான பண்டிதர்கள் ஏதோ மத்திய அரசில்தான் நிலையாகக் குடியேறியிருப்பது போலவும்; மாநிலங்களில் ஏதோ மக்களுடைய வாக்குகளைத் தவறிப் பெற்றுவிடுகிற தான் தோன்றிகளாக இருப்பது போலவும். ஒரு நினைப்பு எப்படி அப்போது நீக்கமற அரசியல் நிர்ணய சபையில் நிறைந்திருந்தது என்பதற்கு இப்பேச்சு ஒரு சான்று!

அடுத்துப் பேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னணி உறுப்பினர் மகாவீர் தியாகி நிலைமையைத் தெளி வாக்கினார்.

"நாம் இப்போது சுயாட்சி கொண்ட மாநிலங்களை உருவாக்குவது என்கிற நமது பழைய கருத்தைக் கைவிட்டு விட்டு, மத்தியிலே அதிகாரங்கள் அனைத்தையும் குவித்து, இப்போது நியமன கவர்னர்களையும் பெறப் போகிறோம்" - என்று உண்மையைப் போட்டு உடைத்தார்.

அவர் இன்னும் ஒருபடி மேலே சென்று, "மத்திய அரசின் கொள்கையை வற்புறுத்தி, அதைப் பாதுகாக்கிற ஏஜெண்டாக அல்லது ஏஜென்சியாக இருக்கிறவர்தாம் கவர்னர்" என்று கூறி முழு அந்தரங்கத்தையும் வெளியிட்டார்.

ஆம்; மாநில அமைச்சரவை மீதும், அத்தகைய அமைச்சரவையை உருவாக்குகிற மாநிலத்து மக்கள் மீதும் சிறிதும் நம்பிக்கை வைக்காமல்; அவர்களைக் கண்காணிப்பதற்கு மத்திய அரசால் நியமிக்கப்படும் 'கங்காணி' தான் கவர்னர்!

1952ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அப்போதைய சென்னை மாநிலத்தில் மொத்தமிருந்த 325 சட்டமன்றத் தொகுதிகளில் 155 இடங்களில் தான் காங்கிரஸ் வென்றது. வெற்றி பெற்ற காங்கிரஸ் அல்லாத 167 பேர் 'ஐக்கிய ஜனநாயக முன்னணி' அமைத்துக் கொண்டனர். தம்மை அந்த 167 பேரும் ஆதரிப்பதாகவும், தாம் முதலமைச்சர் பொறுப்பை ஏற்கத் தயாராக இருப்பதாகவும் அத்தனை பேருடைய கையெழுத்துடன் டி. பிரகாசம், கவர்னர் ஸ்ரீபிரகாசாவுக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

அந்த 167 பேரில் பலர் சுயேச்சைகள் என்பது உண்மை தான். எனினும், யார் முதலமைச்சர் ஆகிறாரோ அவர் பக்கம் தான் இந்தச் சுயேச்சைள் சாய்வாாாள் என்பது உறுதி. ஆனால், ஸ்ரீபிரகாசா காங்கிரஸ் அல்லாத கட்சிக்கு அந்த வாய்ப்பைக் கொடுப்பதற்குத் தயாராக இல்லை.

சட்டசபையிலே சிறுபான்மைக் கட்சியாக இருந் காங்கிரசைப் பதவியில் அமர்த்துவதற்காக அவர் இராஜாஜியை அமைச்சரவை அமைக்கும்படி கேட்டுக் கொண்டார். அதற்கு வகை செய்ய அவரை மேலவக்கு நியமன உறுப்பினராக்கி உள்ளே நுழைய வைத்தார்.

பிரகாசத்தை அழைத்திருந்தால் சுயேச்சைகள் அவர் பக்கம் சேர்ந்திருப்பார்கள். ஆனால், அப்போது 'கவர்னர் யானை' இராஜாஜி தலையில் மாலை சூட்டியதால் சுயேச்சைகள் அவர் பக்கம் சேர்ந்து கொண்டார்கள்.

இதே ராஜாஜி, கவர்னர்-ஜெனரலாக இருந்த போது ஸ்ரீபிரகாசவைக் கவர்னராக நியமித்து, அந்த உத்தரவில் கையெழுத்திட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

இதே ஜனநாயக விரோத காரியத்தைத் தான் 1935ஆவது ஆண்டுச் சட்டப்படி பிரிட்டிஷாரின் ஏஜெண்டுகளாக இருந்த கவர்னர்கள் பல மாகாணங் களில் செய்து கொண்டிருந்தார்கள். சட்டமன்றத்தில் சிறுபான்மைக் கட்சி ஒன்றின் தலைவரை அழைத்து அமைச்சரவை அமைக்கச் சொல்லி, பிறகு அக் கட்சிக்குப் பெரும்பான்மை தேடிக் கொடுத்தார்கள். அப்போது பாதிக்கப்பட்டது காங்கிரஸ் கட்சி! அப்போது கவர்னரையும், 1935ஆம் ஆண்டின் சட்டத்தையும் கண்டித்தது காங்கிரஸ் கட்சி! அதே கட்சி சிறிதும் வெட்கமில்லாமல் தனக்கு பிரிட்டிஷார் செய்த அதே கொடுமையைப் பிற கட்சி களுக்குச் செய்ததும், அப்படி ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிக் கொண்டதும் வரலாற்றின் வெட்ககரமான நிகழ்ச்சிகளுள் ஒன்றாகும்.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தன்மானக் கவிஞர் புலமைப் பித்தன் விடைபெற்றுக் கொண்டார்



புலவர் புலமைப் பித்தன் 08.09.2021 அன்று முடிவெய்திவிட்டார். அவருக்கு வயது 86. நிறை வாழ்வு வாழ்ந்திருக்கிறார். சமரசமற்ற பெரியாரிஸ்ட். புரட்சிக் கவிஞர் மரபில் வந்த கவிஞர். எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருந்தபோது அவரை அரசவைக் கவிஞராக்கினார். அப்போது நடந்த நிகழ்வு ஒன்றை இப்போது நினைவு படுத்தியாக வேண்டும்.

கவிஞர் கண்ணதாசன் அப்போது எம்.ஜி.ஆர். ஆட்சியை தீவிரமாக ஆதரித்து பத்திரிக்கைகளில் எழுதிக் கொண்டிருந்தார். அ.இ.அ.திமுக.வின் ஆதரவு ஏடான 'தென்னகம்' பத்திரிக்கையில் பெரியாரின் துணைவியார் நாகம்மையாரை இழிவுபடுத்துகிற கட்டுரை ஒன்றை கண்ணதாசன் எழுதியிருந்தார். அடுத்த இரண்டு நாட்களில் சென்னை அண்ணா சாலையில் உள்ள பாவாணர் அரங்கில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற புலவர் புலமைப்பித்தன் கண்ணதாசனைக் கடுமையாகச் சாடினார். அந்தக் கவிஞனை என்னுடைய 'பாதக் குறடால்' அடிப்பேன். 'செருப்பால் அடிப்பேன்' என்று அவர் பேசினார்.

எம்.ஜி.ஆர்.க்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. தனது கட்சிக்கு ஆதரவாக இருக்கிற கண்ணதாசனை தனது ஆட்சியின் அரசவைக் கவிஞர் ஒருவர் இப்படி பேசியிருக்கிறாரே என்ற வருத்தத்தில் அவரை நேராய் அழைத்து வருத்தம் தெரிவிக்கச் சொன்னார். புலமைப் பித்தன் நெஞ்சை நிமிர்த்தி நான் ஒரு போதும் வருத்தம் தெரிவிக்க மாட்டேன். நான் ஏற்றுக் கொண்டிருக்கிற தலைவர் பெரியார். தான் பேசிய எந்தப் பேச்சிற்காகவும் வருத்தம் தெரிவித்தது இல்லை என்று நேருக்கு நேராகவே அவர் கூறிவிட்டார். பிறகு எம்.ஜி.ஆர்., புலமைப்பித்தன் சார்பில் தான் மன்னிப்புக் கேட்பதாகக் கூறினார்.

ஈழ விடுதலைக்கு தோளாக நின்று செயல்பட்டவர் புலவர் புலமைப் பித்தன். எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில் அவர் மேலவைத் துணைத் தலைவர் பதவியில் இருந்தார். மேலவைத் துணைத் தலைவராக அவர் பதவியில் இருந்த காலத்தில் சென்னை மயிலாப்பூர் அப்பு முதலி தெருவில் உள்ள அவரது இல்லம் விடுதலை புலிகளின் சரணாலயமாக செயல்பட்டது. பல புலிகள் அந்த வீட்டிற்கு வருவதும் தங்குவதுமாக இருந்தார்கள். முதல்வர் எம்.ஜி.ஆரிடம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை நெருக்கமாகக் கொண்டு வந்து சேர்த்தலில் புலவருக்கு பெரும் பங்கு உண்டு.

தமிழீழ தேசிய தலைவர் பிரபாகரன் வந்து போகின்ற இல்லமாகவும் அவரது இல்லம் இருந்தது. திரைப்பட துறையில் அவர் கால் பதித்தார். அவர் எழுதிய பல பாடல் வரிகள் திராவிட இனத்தையும், தமிழனையும் வரலாற்று வரிகளால் பெருமைப்படுத்தி இருக்கிறது. இன்றும் அந்த பாடல்கள் உயிரோட்டமுள்ள பாடல்களாக உலா வந்து கொண்டிருப்பதை நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

அரசு நடத்திய நிகழ்ச்சிகளாக இருந்த உலக தமிழ் மாநாடுகளில் கவிதைகள் படிப்பதும் கூட அவர் பகுத்தறிவை விடாமல் முழங்கி வந்தார். எந்த மேடையிலும் தனது கொள்கையை அவர் சமரசம் செய்து கொண்டதே இல்லை. 'பெரியார் பெருங்காவியம்' ஒன்றை எழுதுகின்ற முயற்சியில் அவர் இறங்கினார். ஆனால் அந்தப் பணி முற்றுப் பெறாமலே போய் விட்டது. பெரியாரைப் பற்றி ஏராளமான கவிதைகளை அவர் எழுதி குவித்திருக்கிறார்.

"ஆயிரம் ஆண்டாய் சிறையே கோயிலாய் எண்ணிய குருட்டு மாந்தர் விழிக்கு விடுதலை வெளிச்சம் கொடுத்த அறிவுக் கோமகன் தான் நம் பெரியார்" என்று அவர் எழுதினார்.

"ஊனப்படுத்திய உளுத்தர்கள் மீது மான நட்ட வழக்கு தொடுக்க கருப்படை தரித்த முதல் வழக்கறிஞன், தருப்பைகள் போட்ட சதித்திட்டத்தை சுட்டுப் பொசுக்கிய துப்பாக்கி" என்று அவருடைய கவிதைகள் பெரியாருக்காக வெடித்துக் கொண்டிருந்தன. தன்மானமிக்க அந்த கவிஞருக்கு நம்முடைய புகழ் வணக்கத்தை

# கோயில் சொத்துக்களை சூறையாடுவது யார்?

கோயில்களை அரசு கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக, இந்து முன்னணியினர், சங் பரிவார அமைப்புகள், பாஜகவினர் வலியுறுத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு 100 கோயில்களின் இடங்களை முதற்கட்டமாக மீட்டிருக்கிறது என்று அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு கூறியிருக்கிறார். நேற்று முன்தினம் மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான ஒரு இடம் மீட்கப்பட்டிருக்கிறது. இதற்கு மிகவும் முக்கியத்துவம் உண்டு. பென்னாத்தூர் சுப்ரமணிய மேல்நிலைப் பள்ளி என்ற ஒரு பள்ளி மயிலாப்பூரில் இயங்கி வருகிறது. இது ஆர்.எஸ்.எஸ் கூட்டங்கள், ஆர்.எஸ்.எஸ் சகாக்கள் நடத்துகிற ஒரு இடமாகும். இந்த பள்ளி கடந்த 28 ஆண்டுகளுக்கு மேலாக மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான 48 கிரவுண்ட் நிலத்தை ஆண்டுக்கு வெறும் 1750 ரூபாய் மட்டுமே செலுத்தி தன்னுடைய ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டிருந்தது. அந்த நிலத்தின் மதிப்பு 267 கோடி ரூபாய். அதை தற்போது மீட்டு கோவிலுக்குச் சேர்த்திருக்கிறார், அமைச்சர் சேகர்பாபு. 1979க்குப் பிறகு குத்தகை இல்லாமலே தன் வசமாக்கிக் கொண்டு வாடகைக்கு விட்டு வணிகம் செய்து வந்திருக்கிறது பள்ளி நிர்வாகம். ஆர்.எஸ்.எஸ். விழாக்கள் அடிக்கடி நடத்தப்படும் இடம் இந்த உயர்நிலைப் பள்ளி மைதானம்.

ஏற்கெனவே, கோயில் நிலங்களை தங்களுடைய சொந்த நிலங்களாகவே பாவிக்கின்ற அளவிற்கு பார்ப்பனர்கள் தலையிட்டு அபகரித்து வைத்திருக்கிறார்கள் என்ற செய்தியும் வந்து கொண்டுதான் இருக்கின்றன. 1925 ஆம் ஆண்டுதான் தமிழ்நாட்டில் முதன் முதலில் நீதிகட்சி ஆட்சியில் பனகல் அரசர் முதலமைச்சராக இருந்த போது, இந்து கோயில்களை அரசுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரக்கூடிய அறநிலையத்துறை சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது இந்த சட்டத்திற்கு கடுமையான எதிர்ப்புகள் வந்தன. அதற்குப் பிறகு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இப்படிப்பட்ட சட்டங்களே இல்லை. இரண்டு நாட்களுக்கு முன்பு மத்திய பிரதேசத்திலிருந்து வந்த செய்தியை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள கோயில் சொத்துக்கள் அனைத்திற்கும் அந்த கோயில்களின் அர்ச்சகர்களே உரிமையாளர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் கோயில் சொத்துக்களை தங்களது மனம் போன போக்கில் விற்பது, வாங்குவது என்று தங்களது சொந்த சொத்துக்களாகவே அதை நிர்வாகம் செய்து வந்து இருக்கிறார்கள். இப்போது, அங்கே இருக்கிற மாநில ஆட்சி, இந்த கோயில் சொத்துக்களை அர்ச்சகர்கள் தங்களுடைய சொந்த செலவிற்காக விற்கவோ, வாங்கவோ கூடாது கோயில் சொத்துக்கள் அனைத்தும் கடவுளுக்குத்தான் சொந்தம் எனவே பத்திரங்களை பூசாரிகளின் பெயர்களுக்கு எழுதக்கூடாது கடவுளின் பெயர்களுக்குத் தான் எழுத வேண்டும் என்று மாநில அரசு ஒரு உத்தரவை பிறப்பித்தது. அந்த உத்தரவை எதிர்த்து மத்திய பிரதேசத்தில் உள்ள அர்ச்சகர்கள் உயர் நீதிமன்றம் சென்றார்கள்.

மத்தியப் பிரதேச உயர்நீதிமன்றம், 'அர்ச்சகர்களுக்குத் தான் கோயில் நிலங்கள் சொந்தம். எனவே அரசு கொண்டு வந்த சட்டம் செல்லாது' என்று தீர்ப்பளித்து விட்டது. பிறகு மாநில அரசு உச்சநீதி மன்றம் போனது. உச்சநீதிமன்றம் இதில் திட்டவட்டமான ஒரு தீர்ப்பை வழங்கி, 'கோயில் இடங்கள் என்பது கடவுளுக்குத் தான் சொந்தமே தவிர, அர்ச்சகர்களுக்கு அல்ல. அது அவர்களுடைய பூர்வீக சொத்தும் அல்ல. பக்தர்கள் கடவுளுக்குத் தான் நிலங்களை அளித்தார்களே தவிர அர்ச்சகர்களுக்கு கொடுக்கவில்லை. எனவே மத்திய பிரதேச மாநில அரசின் சட்டம் செல்லும்' என்று தீர்ப்பளித்திருக்கிறது.

## முதல்வரின் சமூக நீதி நாள் அறிவிப்பு: சென்னையில் கழகம் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்

பெரியார் பிறந்த நாளை சமூக நீதி நாளாக அறிவித்து, பெரியாரின் சுற்றுப்பயணத்தை நாம் தொடர்வோம் என்று அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைப் பாராட்டி, திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், 06.09.2021 அன்று சென்னை வி.எம் தெரு பெரியார் படிப்பகத்தில் பேனர் வைக்கப்பட்டு, பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பொது மக்களுக்கு இனிப்புகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில், தலைமை நிலையச் செயலாளர் - தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர்கள் அய்யனார், அன்பு தனசேகர், சென்னை மாவட்ட கழகத் தலைவர் வேழவேந்தன், மாவட்ட செயலாளர் உமாபதி, திமுக தென் மாவட்ட துணை செயலாளர் ஆர்.என் துரை, திமுக கா.வே. செழியன் ஆகியோருடன் சென்னை கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

# சுயமரியாதை சுடரொளி துரைமுத்து நினைவேந்தல்

சுயமரியாதை சுடரொளி துரைமுத்து (51) படத்திறப்பு நிகழ்வு, மறைமலை நகரில் துரைமுத்து இல்லத்தில் 12.09.2021 அன்று மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்து கொண்டு நினைவேந்தல் உரையாற்றினார். திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி பூங்குன்றன், படத்தை திறந்து வைத்து நினைவேந்தல் உரையாற்றினார். மேலும், விடுதலை சிறுத்தைகள் கட்சி மண்டலச் செயலாளர் - சு.க விடுதலை செழியன்,




விடுதலை சிறுத்தைகள் கட்சி தொகுதி செயலாளர் - கேது. தென்னவன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் - செங்கை தமிழரசன், திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட செயலாளர் - செ.கு தெள்ளமிழ்து, திராவிடர் கழகம் - திருக்குறள் வெங்கடேசன், தமிழ் உணர்வாளர் கூட்டமைப்பு - மு.பிச்சைமுத்து உள்ளிட்டோர் இரங்கல் உரையாற்றினர்.

கழகத் தோழர் குகன் நிகழ்வை நெறியாள்கை செய்தார். துரைமுத்து இணையர் சந்திரா நன்றி கூறினார். துரைமுத்து பெரியாரியலைப் பரப்புவதையே தனது உயிர் மூச்சாகக் கருதி அனைத்து பெரியார் இயக்கங்கள், முற்போக்கு அமைப்புகளிடையே நெருக்கத்துடன் செயல்பட்டதையும் உறவாடி வந்ததையும் குடும்பத்தையே பெரியாரியலுக்குக் கொண்டு வந்து வாழ்ந்து காட்டியதையும் தோழர்கள் உணர்வுடன் பகிர்ந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 16th September 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN